துயச் சுருக்கு, சரம சுலோகச் சுருக்கு, கீதார்த்த சங்கிரகம்

## திரு மந்திரச் சுருக்கு

1:##
நாவலர் மறை நாலொன்றும்* நலந்திகழ் மறை ஒன்றேராது *
ஆவலிப்பலைக்கு மோகத்து* அழுந்தி நின்று அலமர்கின்றீர் *
தூவலம் புரியாமொன்றில்* துவக்கமாம் வண்ணமொன்றால் *
காவலென் நகரத்து அவ்வாய்க்* கருத்துறக் காண்மினீரே. (2)

2:
இளக்கமில் மயக்கம் தன்னால்* எனக்கு யான் உரியன் என்னும் *
களக்கருத்தொன்றே கொண்டு* கடு நரகடைந்து நின்றீர் *
விளக்குமவ்வெழுத்தின் நாலாம்* வேற்றுமை ஏற்றி வாங்கித் *
துளக்கமில் அடிமை பூண்டு* தூயராய் வாழ்மினீரே.

3:
அப்பொருள் இகந்து மற்றும்* அழித்தழிந்தெழுவார் தாளில் *
இப்பொருள் இகந்த வன்பால்* இரங்கினீர் வணங்கி வீழ்ந்தீர் *
உப்பொருள் உள்ளி மற்றேர்* உயிர் தனக்குரிமை மாற்றி *
எப்பொருள் பயனும் ஈதென்று* எண்ணினிர் எழுமினீரே.

4:
என்றுமோர் ஏதமின்றி* இரவியும் ஒளியும் போல *
ஒன்றி நின்றுலகளிக்கும்* உகமிகந்தடிமை வைத்தீர் *
ஒன்று மூன்றெழுத்தாய் ஒன்றும்* ஒன்றிலொன்று உடைய முன்னே *
ஒன்றிய இரண்டை உள்ளி* உளரென உய்ம்மினீரே.

5:
தத்துவ மறு நான்கோடு* தனியிறை அன்றி நின்ற *
சித்தினை உணராதென்றும்* திரள் தொகையாகி நின்றீர் *
மத்தனைத் தனி விடாதே* மையிலா விளக்க மாக்கி *
உத்தமன் அடிமையான* உயிர்நிலை உணர்மினீரே.

6:
தனதிவை அனைத்துமாகத்* தானிறையாகு மாயன் *
உனதெனும் உணர்த்தி தாராது* உமக்கு நீர் உரிமை உற்றீர் *
எனதிவை அனைத்தும் யானே* இறையெனும் இரண்டுந் தீர *
மநவெனும் இரண்டின் மாறு* வல்வினை மாற்றுவீரே.

7:
அழிவிலா உயிர்கட் கெல்லாம்* அருக்கனாய் அழியா ஈசன் *
வழியலா வழி விலக்கும்* மதியெழ மாய மூர்த்தி *
வழுவிலாது இவை அனைத்தும்* வயிற்றில் வைத்துமிழ்ந்த மாலை *
நழுவிலா நார வாக்கில்* நாடிநீர் நணுகுவீரே.

8:
வயனமொன்றறிந்து உரைப்பார்* வன்கழல் வணங்க வெள்கி *
நயனம் உள்ளின்றி நாளும்* நள்ளிருள் நண்ணி நின்றீர் *
அயனம் இவ்வனைத்துக்கும் தான்* அவை தனக்கயன மென்னப் *
பயனுமாய்ப் பதியுமான* பரமனைப் பணிமினீரே.

9:##
உயர்ந்தவர் உணர்ந்த வாற்றால்* உவந்த குற்றேவல் எல்லாம் *
அயர்ந்து நீர் ஐம்புலன்கட்கு* அடிமை பூண்டு அலமர்கின்றீர் *
பயந்திவை அனைத்தும் ஏந்தும்* பரமனார் நாமம் ஒன்றில் *
வியந்த பேர் அடிமை தோற்றும்* வேற்றுமை மேவு வீரே. (2)

10:##
எந்திசை பரவும் சீரோர்* எங்களுக்கு ஈந்த எட்டில் *
உண்டவாறு உரைப்பார் போல* ஒன்பது பொருள் உரைத்தோம் *
மண்டுநான் மறையோர் காக்கும்* மாநிதி இவை அனைத்தும் *
கண்டவர் விள்ளார் விள்ளக்* கருதுவார் காண்கிலாரே. (2)

## துயச் சுருக்கு

1:##
இன்னமுதில் பிறந்தாள்* இதங் கேட்க உரைத்தபிரான் *
பொன்னருளால் மறை மௌலியில்* பூண்ட இரண்டிசைத்துத் *
தன் உரை மிக்க தனம் இதெனத்* தந்தவே தகத்தில் *
துன்னு பொருள்கள் பத்தும்* தொலையா நிதியாகின்றவே. (2)

2:
அருவுருவானவை தன்னை அடைந்திடத்* தானடைந்து *
வெருவுரை கேட்டு அவை கேட்பித்து* அகற்றும் வினைவிலக்கி *
இருதலை அன்புதனால்* எமை இன்னடி சேர்த்தருளும் *
திருவுடனே திகழ்வார்* செறிந்தார் எங்கள் சிந்தையுள்ளே.

3:
ஒருயிராய் நின்ற* ஒண்சுடர் இன்ப உருத்தனிலும் *
பேருருவத்திலும்* பின்னதில் தோற்றும் உருக்களிலும் *
ஓர் உருவான உலகிலும்* ஏற்கும் உருக்களினால் *
சேருதல் மன்னு செய்யாளன்பர்* நம்மனம் சேர்ந்தனரே.

4:
காரணமாய் இறையாய்க்* கதியாய் அமரும் பதியாய் *
ஆரண மோதும் அனைத்துறவாய்* அகலா உயிராய்ச் *
சீரணியும் சுடராய்ச்* செறிந்தெங்கும் திகழ்ந்துநின்ற *
நாரணனார் நமக்காய் நல்கி* நாம் தொழ நின்றனரே.

5:
வானமர் மன்னுருவாய்* வகையால் அதில் நாலுருவாய் *
மீனமது ஆமை கேழல்* முதலாம் விபவங்களுமாய் *
ஊனமர் உள்ளுருவாய்* ஒளியாத அருச்சையுமாய் *
தேனமர் செங்கழலான்* சேர்த்தனன் கழல் எம்மனத்தே.

6:
வேறோர் அணங்கு தொழும்* வினைதீர்த்து எம்மை ஆண்டிடுவான் *
ஆறுமதன் பயனும்* தந்தளிக்கும் அருளுடையான் *
மாறிலதாய் இலகும்* அது மெல்லடிப் போதிரண்டால் *
நாறு துழாய் முடியான்* நமக்குச் சரணாயினனே.

7:
பெறுவது நாம் பெரியோர்* பெறும் பேறென நின்றவெம்மை *
வெறுமை உணர்த்தி* விலக்காத நன்னிலை ஆதரிப்பித்து *
உறுமதியால் தனை* ஒண் சரணென்ற உணர்வு தந்த *
மறுவுடை மார்பனுக்கே* மன்னடைக்கலம் ஆயினமே.

8:
அருமறை யாதும் துறவோமென* அறிந்தார் கவரும் *
கருமமும் ஞானமும் காதலுங் கண்டு* முயலகிலோம் *
வருவதும் இன்னிலையாய்* மயலுற்ற எமக்குளதோ *
திருமகளார் பிரியாத்* திருமாலன்றி நற்சரணே.

9:
சுருங்கா வகிலமெலாம்* துளங்கா அமுதக் கடலாய் *
நெருங்காது அணைந்துடனே நின்ற* நந்திரு நாரணனுர் *
இரங்காத காலங்களெல்லாம்* இழந்த பயன்பெறவோர் *
பெருங் காதலுற்று இனிமேல்* பிரியாமை உகந்தனமே.

10:
கடி சூடு மூன்றும்* கழல் பணிந்தார்க்குக் கடிந்திடவே *
முடிசூடி நின்ற* முகில் வண்ணனுர் முன்னுலகளந்த *
வடிசூடு நாம் அவர் ஆதரத்தால்* உடுத்துக் களையும் *
படிசூடி அன்புடனே* பணி செய்யப் பணிந்தனமே.

11:##
தனதன்றிவையெனத்* தானன்றென மறை சொன்னவெலாம் *
எனதென்றும் யானென்றும்* எண்ணுதலால் வரும் ஈனமெலாம் *
மனதொன்றி இன்று* நமவென்றதே கொண்டு மாற்றுதலால் *
தனதன்றி ஒன்றுமிலாத்* தனித் தாதை சதிர்த்தனனே. (2)

12:##
சேர்க்கும் திருமகள்* சேர்த்தியில் மன்னுதல்சீர்ப் பெரியோற்கு *
ஏற்கும் குணங்கள்* இலக்காம் வடிவில் இணையடிகள் *
பார்க்கும் சரணத்தில்* பற்றுதல் நன்னிலை நாம் பெறும் பேறு *
ஏற்கின்ற எல்லைகளெல்லாம்* களையற எண்ணினமே. (2)

## சரம சுலோகச் சுருக்கு

1:##
கல்லார் அகலும்* கருமமும் ஞானமும் காதலும் *
மற்றெல்லா நிலைகளுக்கேற்ப* விதித்த கிரிசைகளும் *
வல்லார் முயல்க* வலியிழந்தார் எந்தனைத் தொழுகென்று *
எல்லாத் தருமம் உரைத்தவன்* இன்னடி சேர்ந்தனமே. (2)

2:
வெறுமை உணர்ந்தது முன்னிட்டு* வேறு அங்கமில்லையெனக் *
குறியவன் இன் நறவு எட்டக்* குறித்திடுங் கோனை துறந்து *
உறும் அயன் அத்திரம் என்னப்* பொரு நிலை ஓர்ந்திடவோர் *
அறநெறி அன்றுரைத்தான்* அழியா வறமாயினனே.

3:
வாரிதி விட்டு* மலர் மகளோடு மதுரைவந்து *
பாரத வெஞ்சமர்* பார்மகள் பாரம் செகவுகந்து *
சாரதியாய் முன்பு தூதனுமாய்* தளரும் விசயன் *
தேரதில் நின்றவனைத்* தேற்றினன் திறம் ஆயினமே.

4:
தன்னருளால் பெறுஞ் சாதனம்* சாதகன் என்று இவற்றைத் *
தன்னுடன் எண்ணுதல் நீங்கத்* தனித்தொரு சாதனமாய்ப் *
பொன்னருளோடும் அப்பூமகளோடும்* புகழ நின்ற *
இன் உரை ஈசனையே* ஏகம் எண்ண விசைந்தனமே.

5:
ஊனில் இணைத்து உழல்விக்கும்* வினைக் கடலுள் விழுந்த *
யான் எனதான குணங்கள்* எனக்கிசை நல்வழியும் *
தான் உதவித் தனைத் தந்திட நின்ற* தனித்தருமம் *
நானினி வேறோர் பரம்* நணுகா வகை நல்கியதே.

6:
கடுவினை நாம் பெறும்பேற்றைத்* தகைந்தமை கண்டுநம்மேல் *
தொடை விலகாமல் இசைந்து* ஒரு காலந் துணிவுடனே *
உடைமை அடைக்கலமாக* அடைக்கும் உகப்பதனால் *
அடையென அன்றுரைத்தான்* அடைவித்தனன் தன்னடியே.

7:
கானென்ற வேதங்கள்* காக்கும் பரனென்று காட்ட நின்றோன் *
தான் என்று அறியகிலார்க்கு* அறிவிக்கும் தனித் திறலோன் *
வான் ஒன்றினரொடு* மானிடன் என்ன அவதரிப்பான் *
நான் என்ற நந்திருமால்* நம்மை நற்பதம் சேர்த்திடுமே.

8:
தன்னிலை காட்டித்* தனிமை உகந்து தனித் தகவால் *
அன்னிலை தீர அடைக்கலங் கொண்டு* அடி சேர்த்திடவே *
பன்னிலை மூல வெழுத்திலும்* பாண்டவன் தேர் தனிலும் *
முன்னிலை கொண்ட பிரான்* எமை முன்னிலை கொண்டனனே.

9:
காடுகளோ நரகோ* கடிதாம் கரளத் திரளோ *
சூடு விடா அனலோ* தொலையா நிலை நள்ளிருளோ *
சாடு படச் சரணுல்* அன்று சாடிய சாரதியார் *
வீடு செய்வித்து நம்மை* விடுவிக்கின்ற பாவங்களே.

10:##
சென்று உயர் வானமர்ந்து* அவ்வடியாருடன் சேர்ந்திடவே *
இன்று எனில் இன்று* நாளையெனில் நாளை இனிச்செறிந்து *
நின்ற நிலை நின்னனைத்து வினையும்* நின் விட்டகலக் *
கன்றி விடுப்பன் என்முன்* கருத்தால் நமைக் காத்திடுமே. (2)

11:##
அறிவும் அனைத்துமிலா அடியோமை* அடைக்கலங்கொண்டு *
உறவென நின்றவெலாம்* உறவே நின்ற தான் எமக்காய் *
மறு பிறவித் துயர் வாரா வகை* மனங் கொண்டகலா *
இறையவன் இன்னருளால்* எங்கள் சோகம் தவிர்த்தனனே. (2)

கீதார்த்த சங்கிரகம்

தனியன்

கட்டப் பொருள்விரித்த காசினியில் நான்மறையின்
இட்டப் பொருள் இயம்பும் இன் பொருளைச் சிட்டர் தொழும்
வேதாந்த தேசிகனை மேவுவார் தங்கள் திருப்
பாதம்புயம்* அடியேன் பற்று.

கீதை மொழிந்தருளும் வேதாந்த தேசிகனுர் *
பாதார விந்தமலர் பற்று.

1:##
கருமமும் ஞானமும் கொண்டெழும்* காதலுக்கோர் இலக்கென்று *
அருமறை உச்சியுள்* ஆதரித்தோதும் அரும்பிரமம் *
திருமகளோடு வரும்* திருமாலென்று தானுரைத்தான் *
தருமமுகந்த தனஞ்சயனுக்கு* அவன் சாரதியே. (2)

2:
உகவை அடைந்த உறவுடையார்* பொரலுற்ற அந்நாள் *
தகவுடன் அன்பு கரை புரளத்* தருமத்து அளவில் *
மிக உளம் அஞ்சி விழுந்து* அடி சேர்ந்த விசயனுக்கோர் *
நகையுடன் உண்மை உரைக்க* அமைந்தனன் நாரணனே.

3:
உடலம் அழிந்திடும்* உள்ளுயிர் ஒன்றழியாது எனைப்போல் *
விடுமது பற்று* விடாதது அடைத்த கிரிசைகளே *
கடுக உனக்குயிர் காட்டும் நினைவு* அதனுல் உளதாம் *
விடு மயலென்று* விசயனைத் தேற்றினன் வித்தகனே.

4:
சங்கந் தவிர்ந்து* சகஞ்சதிர் பெற்ற தனஞ்சயனே *
பொங்குங் குணங்கள் புணர்ப்பு அனைத்தும்* புக விட்டு அவற்றுள் *
நங்கண் உரைத்த கிரிசையெல்லாம்* எனவும் நவின்றுர் *
எங்கும் அறிவர்களே என்று* நாதன் இயம்பினனே.

5:
பிறவாமை தந்திடத்* தானே பிறக்கும் பெருமைகளும் *
துறவாக் கிரிசைகள்* தூமதி தன்னுல் துலங்குகையும் *
இறவா உயிர் நன்னிலை கண்டிடும்* உலகிந் நிலையும் *
மறை வாழ மாயவன்* நேயனுக்கு அன்று அறிவித்தனனே.

6:
கண்டு எளிதாம் கருமம்* உயிர் காட்டக் கடுகுதலும் *
மண்டி அதன்படியில்* மனங் கொள்ளும் வரிசைகளும் *
கண்டறியா உயிரைக்* காணலுற்ற நினைவுகளும் *
வண் துவரேசன் இயம்பினன்* வாசவன் மைந்தனுக்கே.

7:
யோக முயற்சியும்* யோகிற் சமநிலை நால்வகையும் *
யோகின் உபாயமும்* யோகுதனால் வரும் பேறுகளும் *
யோகுதனில் தன் திறமுடை* யோகுதன் முக்கியமும் *
நாகணை யோகி நவின்றனன்* நன்முடி வீரனுக்கே.

8:
தான் நின்ற உண்மையைத்* தன் தனி மாயை மறைத்தமையும் *
தான் அன்றி மாயைதனைத் தவிர்ப்பான்* விரகு அற்றமையும் *
மேல் நின்ற பத்தர்கள் நால்வரில்* ஞானிதன் மேன்மைகளும் *
தேனின்ற செங்கழலான்* தெளிவித்தனன் பார்த்தனுக்கே.

9:
ஆராத செல்வமும்* ஆருயிர் காணும் அரும்பயனும் *
பேராது தன் கழல் கீழ்* அமரும் பெரு வாழ்ச்சிகளும் *
சோராது உகந்தவர்* தூமதி கொள்வதும் செய்வனவும் *
தேரா விசயனுக்குத்* திரு நாரணன் செப்பினனே.

10:
தன் மேன்மையும்* தன் பிறப்பில் தளராத் தனிநிலையும் *
பல் மேனி நண்ணினன் பால்* பிரியா அன்பர் ஆசைகளும் *
புல் மேனி விண்ணவர் பால்* புரியாத தன் பத்திமையும் *
நல் மேனி நாரணன்தான்* நரனுக்கு நவின்றனனே.

11:
எல்லையிலாத தன் சீலமாம்* இன்னமுதக் கடலும் *
எல்லையிலாத விபூதியெலாம்* தன தானமையும் *
எல்லையில் பத்திதனை* எழுவிக்கத் திருவருளால் *
எல்லையில் ஈசன் இயம்பினன்* இந்திரன் மைந்தனுக்கே.

12:
எல்லம் தனக்குருவாய் இலங்கும் வகை* தானுரைத்துச் *
சொல்லால் அறிந்தது* சோராமல் கண்டடி வேண்டுமென்ற *
வில்லாளனுக்கு அன்று* மெய்க்கண் கொடுத்து இது வேறுமுண்டோ *
நல்லார்கள் காண்பரென்று* நவின்றான் நங்கள் நாயகனே.

13:
தன் கழலில் பத்தி தாழாததும்* அதன் காரணமாம் *
இன்குண சிந்தையும்* ஈதறியார்க்கு அவ்வடிமைகளும் *
தன் கருமங்கள் அறியாதவர்க்கு* இலகு நிலையும் *
தன் கழலன்பர்க்கு* நல்லவன் சாற்றினன் பார்த்தனுக்கே.

14:
ஊனின் படியும்* உயிரின் பிரிவும் உயிர்பெறுவார் *
ஞானம் பெறுவகையும்* ஞானம் ஈன்ற உயிர்ப் பயனும் *
ஊன் நின்றதற்கு அடியும்* உயிர் வேறிடும் உள் விரகும் *
தேன் நின்ற பாதன்* தெளிவித்தனன் சிலைப் பார்த்தனுக்கே.

15:
முக்குணமே உயிர் முற்றவுங் கட்டிட* மூண்டமையும் *
முக்குணமே அனைத்தும் வினை கொள்ள* முயன்றமையும் *
முக்குண மாயை கடத்தலும்* முக்கதி தந்தளிப்பும் *
முக்குண மற்ற பிரான்* மொழிந்தான் முடியோன் தனக்கே.

16:
மூவெட்டினும்* அதில் மோகமடைந்த உயிர்களினும் *
நாவெட்டெழுத்தொடு* நல் வீடு நண்ணின நம்பரினும் *
மேவெட்டு வன்குண விண்ணோர்களினும்* விசயனுக்குத் *
தாவிட்டு உலகளந்தான்* தனை வேறென்று சாற்றினனே.

17:
ஆணை மருதவர் தேவர்* அல்லா வழக்கோர் அசுரர் *
கோணை மராத குணச்செல்வ* நீ குறிக்கொள் மறையைப் *
பேணிய தத்துவமும்* பிணியற்ற கிரிசைகளும் *
காண் இதனால் விசயாவென்று* கண்ணன் இயம்பினனே.

18:
மறை பொருந்தாதவை* வல் அசுரர்க்கு வகுத்தமையும் *
மறை பொருந்தும் நிலையின்* வன் குணப்படி மூவகையும் *
மறை நிலை தன்னை வகுக்கும்* குறி மூன்றின் மேன்மையும் * அம்–
மறை உமிழ்ந்தானுரைத்தான்* வாசவன்தன் சிறுவனுக்கே.

19:
சத்துவ வீடுடை நற் கருமம்* தானுகந்தமையும் *
சத்துவமுள்ளது* தான் குறிக்கொள் வகை செய்ததுவும் *
சத்துவ நற் கிரிசைப் பயனும்* சரணாகதியும் *
சத்துவமே தருவான் உரைத்தான்* தனிப் பார்த்தனுக்கே.

20:##
வன் பற்று அறுக்கும் மருந்தென்று* மாயவன் தானுரைத்த *
இன்பக் கடலமுதாமென நின்ற* இக்கீதை தன்னை *
அன்பர்க்கு உரைப்பவர் கேட்பவர்* ஆதரித்து ஓதுமவர் *
துன்பக் கடலுள் துளங்குகை நீங்கித்* துலங்குவரே. (2)

21:##
தீதற்ற நற்குணப் பாற்கடல்* தாமரைச் செம்மலர்மேல் *
மாதுற்ற மார்வன் மருவ* இன் கீதையின் வண்பொருளைக் *
கோதற்ற நான்மறை மௌலியின்* ஆசிரியன் குறித்தான் *
காதல் துணிவுடையார்* கற்கும் வண்ணம் கருத்துடனே. (2)

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: